# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 02.09.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தம்மிடம் பைஅத் செய்தவர்களுக்கு கூறிய போதனைகளில் மிக முக்கியமான அடிப்படையான போதனை என்னவென்றால், பைஅத் செய்த பிறகு அவர்கள் தங்களிடம் தூய்மையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதேயாகும். மேலும் தனது இறைவனுடன் ஒரு தொடர்பை அவர்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தனது ஒழுக்கத்தின் தரத்தை மிகவும் உயர்வானதாக ஆக்கிக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

எவர்கள் இந்த இயக்கத்தில் நுழைந்து என்னுடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு என்னை வழிகாட்டியாக ஆக்கிக் கொண்டார்களோ அதன் நோக்கம் அவர்கள் நன்னடத்தை, தக்வா ஆகியவற்றில் மிக உயர்வான தகுதியை அடைய வேண்டும் என்பதாக இருக்க வேண்டும். எந்தக் குழப்பமும், தீமையும், தீய நடத்தையும் அவர்களுக்கு அருகில்கூட வரக் கூடாது. அவர்கள் ஐவேளை ஜமாஅத்தாகத் தொழுவதைப் பேண வேண்டும். அவர்கள் பொய் சொல்லக் கூடாது. நாவால் எவருக்கும் தொல்லை கொடுக்கக் கூடாது. எந்த தீய செயலையும் அவர்கள் செய்யக் கூடாது. எவ்வித தீங்கு, அநீதி, குழப்பம் ஆகியவற்றின் எண்ணம் அவர்களின் உள்ளத்தில் வரக்கூடாது. சுருக்கமாக, எல்லாவிதமான பாவம், குற்றங்கள், செய்யக்கூடாத செயல்கள், பேசக்கூடாத சொற்கள், எல்லாவிதமான மனயிச்சைகள், பொருத்தமற்ற செயல்கள் ஆகியவற்றிலிருந்து விலகியிருக்க வேண்டும். இறைவனிடத்தில் தூய உள்ளம் கொண்ட தீங்கிழைக்காத எளிமையான இயல்புடைய அடியார்களாக ஆக வேண்டும். விஷமத் தன்மையுடைய எந்தவொரு இயல்பும் அவர்களிடம் இருக்கக் கூடாது.

இன்று அல்லாஹ்வின் அருளால் எந்த மக்கள் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளார்களோ அவர்கள் இந்த தூய மாற்றங்கள் நம்மிடம் ஏற்படுவதுடன் அவை நம்மிடம் நிலைபெற்றிருக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் முயற்சி செய்கின்றனர். எவர்கள் பைஅத்தின் உண்மையைப் புரிந்து கொண்டார்களோ அவர்களிடம் ஒரு புரட்சி உருவாகி இருக்கின்றது. உருவாகி வருகிறது. நான் இப்போது பைஅத் செய்த பிறகு ஒரு புரட்சியை தங்களிடம் உருவாக்கியுள்ள மக்களின் சில சம்பவங்களை உங்கள் முன் வைக்க இருக்கிறேன்.

உலகிலுள்ள பல்வேறு சமுதாயங்களைச் சார்ந்த, பல்வேறு இனங்களைச் சார்ந்த இத்தகைய மக்கள் பைஅத் செய்த பிறகு அல்லாஹ்விடம் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதில் முன்னேறி வருகின்றார்கள். நன்மைகளைச் செய்வதிலும் உயர்வான நல்லொழுக்கத்திலும் அவர்கள் முன்னேறி வருகின்றார்கள். தங்களது நஃப்ஸின் விருப்பங்களை அழிப்பதிலும் அல்லாஹ்வின் கட்டளைகளைப் பேணி நடப்பதிலும் அவர்கள் முன்னேறி வருகின்றார்கள். தங்களது ஆன்மீக முன்னேற்றத்திற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்களுக்கு அல்லாஹ்வின் மீதுள்ள அச்சம் – அவன் மீதுள்ள அன்பு, உலகத்தின் மீதுள்ள அச்சம் – உலகத்தின் மீதுள்ள அன்பை விட மிகுதியாக மேலோங்கி நிற்கின்றது.

மாநாட்டின் இரண்டாவது நாளில் நான் படித்த அறிக்கையிலிருந்தும் இந்த சம்பவங்கள் எடுக்கப்பட்டுள்ளன. நேரம் குறைவாக இருந்ததால் இவற்றை அப்போது என்னால் எடுத்துக் கூற முடியவில்லை. அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு புதிதாக பைஅத் செய்தவர்களிடம் உருவாகியுள்ள வழக்கத்திற்கு மாற்றமான மாற்றங்கள் என்பதே அதன் தலைப்பாகும். இந்த தலைப்பில் இத்தகைய

சம்பவங்களை நான் பிரிதொரு சந்தர்ப்பத்தில் கூறுவேன் என்று நான் மாநாட்டின் போது கூறியிருந்தேன். இன்று இந்த சம்பவங்களை நான் கூறுகிறேன்.

இது மிகவும் முக்கியமான தலைப்பாகும். பழைய அஹ்மதிகள் தங்களின் ஈமானில் முன்னேறுவதற்கும், தங்களை சீர்திருத்திக் கொள்வதற்கும் இவை காரணமாக அமைகின்றது. புதிதாக வந்தவர்களும் இந்த சம்பவங்களைக் கேட்கும் போது தங்களது ஈமானில் அவர்கள் மேலும் முன்னேறுகின்றனர். எவர்கள் அஹ்மதிகளாக ஆகிவிட்டார்களோ அவர்களிடம் மகத்தான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

**டெல்லி அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

உஸ்மான் சாஹிப் என்பவர் 2010 ஆம் ஆண்டு காதியான் ஆண்டு மாநாட்டின் போது பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார். அவர் கூறினார்: நான் பைஅத் செய்வதற்கு முன்பு எப்போதாவது தொழுது வந்தேன். ஆனால் பைஅத் செய்த நாளிலிருந்து ஐவேளை தொழுகைகளை தொழுவதோடு மட்டுமல்லாமல் பெரும்பாலும் தஹஜ்ஜுத் தொழுவதற்கான நல்வாய்ப்பும் எனக்கு கிடைத்து வருகிறது.

இதுபோன்று புதிதாக பைஅத் செய்தவர்கள் பல சம்பவங்களை எழுதுகின்றார்கள். இறைவன் இவ்விஷயத்தில் தொடர்ந்து இவர்கள் உறுதியாக நிலைத்து நிற்கும்படி செய்வானாக! பழைய அஹ்மதிகளாக இருக்கும் நம்மில் பலரும் சில நேரங்களில் தொழுகைகளில் சோம்பேறித்தனம் காட்டுபவர்களாக இருக்கின்றோம். பழைய அஹ்மதிகளுக்கு இவ்விஷயத்தில் உணர்வு ஏற்பட வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தில் வந்த பிறகு நாம் நமது பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். இது மிக முக்கிய பொறுப்பாகும். இது இல்லாமல் நாம் பைஅத் செய்வது வெறும் பெயரளவிலான பைஅத் ஆகவே இருக்கும். இதில் எல்லாவற்றையும் விட மிக முக்கியமான விஷயம் கடமையான தொழுகைகளைப் பேணுவதாகும். இதன் பக்கம் கவனம் இருக்க வேண்டும். பிறகு நஃபிலான தொழுகைகளையும் தொழ வேண்டும். ஒவ்வொருவரும் இந்த விஷயத்தை சிந்திக்க வேண்டும். புதிதாக வந்தவர்கள் எவ்வாறு தங்களிடம் தூய மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்கின்றார்கள் என்பதை அவர்கள் பார்க்க வேண்டும்.

**பிறகு கானாவிலுள்ள அப்பர் ஈஸ்டன் ரீஜியனின் முபல்லிக் தாரிக் மஹ்மூது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:**

கடந்த சில நாட்களுக்கு முன்பு கம்பாவா என்ற இடத்தில் புதிய அஹ்மதிகளின் ஒரு Conference நடைபெற்றது. இந்த சந்தர்ப்பத்தில் புதிதாக அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட ஒரு இமாம் தனது சொற்பொழிவில் நாங்கள் முஸ்லிம்களாக இருந்தோம் என்று கூறினார்.

கானாவின் வடக்குப் பகுதியில் வசிப்பவர்கள் பெரும்பாலார் முஸ்லிம்கள் ஆவர். இப்போது இங்கு அல்லாஹ்வின் அருளால் பைஅத்துகள் நடைபெறுகின்றன. ஆரம்ப காலத்தில் அஹ்மதிய்யத் கானாவில் பரவிய சமயத்தில் கடலோரப் பகுதிகளில் ஜமாஅத் பரவியது. அதாவது தெற்குப் பகுதியில் ஜமாஅத் பரவியது. அப்பகுதிகளில் கிறிஸ்தவத்திலிருந்து அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் மூலமாக மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அந்தப் பகுதியில் மிக விரைவாக ஜமாஅத் முன்னேறியது. ஆனால் முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதிகளில் கடுமையான எதிர்ப்பு நிலவி வந்தது. அந்தப் பகுதியில் ஒரேயொரு ஜமாஅத்துதான் நிறுவப்பட்டது. இன்னும் தெளிவாகச் செல்ல வேண்டுமென்றால் அஹ்மதிய்யத் இந்தப் பகுதிகளில் வந்த சமயத்தில் இங்கு அஹ்மதிய்யத்தின் செடி நாட்டப்பட்டது. பிறகு ஜமாஅத் வளர்ந்து வந்தது. ஆனால் வடக்கிலுள்ள மற்ற பகுதிகளில் முஸ்லிம்கள் வசித்த இடங்களில் கடுமையான எதிர்ப்பு இருந்து வந்தது. இப்போது அல்லாஹ்வின் அருளால் சில வருடங்களாக வடக்குப் பகுதிகளில் மிக விரைவாக ஜமாஅத் பரவி வருகிறது.

புதிதாக அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட இமாம் சாஹிப் தங்களது தோழர்களையும் ஜமாஅத்தில் இணைய வைத்துள்ளார். **அவர் எழுதுகின்றார்:**

நாங்கள் முஸ்லிம்களாக இருந்தோம். ஆனால் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளைப் பற்றி அறியாதவர்களாக இருந்தோம். அஹ்மதிய்யத் எங்களை இஸ்லாத்தின் சரியான போதனைகளை தெரிவித்தது. அதைப் புரிய வைத்தது. அந்த இமாம் சாஹிப் கூறுகின்றார்:

நான் முதலில் மக்களுக்கு தாவிஸ் கயிறுகளைக் கொடுத்து வந்தேன். ஆனால் அஹ்மதிய்யத்தின் பரக்கத்தால் இந்த வேலையை விட்டு விட்டேன். இப்போது இந்த பணியை இஸ்லாத்திற்குப் புறம்பான செயலாக நான் கருதுகின்றேன். தாவிஸ் கயிறுகளை விற்கும் இந்த வியாபாரம் பொதுவாக முஸ்லிம்களிடம் இந்தியா மற்றும் பாகிஸ்தானில் மட்டுமின்றி உலகின் ஒவ்வொரு இடத்திலும் காணப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் அரபிகளிடமும் உலகிலுள்ள மற்ற பகுதியினர்களிடமும் இது காணப்படுகிறது.

இப்படிப்பட்ட பித்அத்துகளை மார்க்கத்தில் புதிதாக புகுத்தப்பட்ட விஷயங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்து அவற்றை தடுத்தார்கள். மக்களை அவற்றிலிருந்து விலக்கி வைத்தார்கள். மேலும் இறைவனுடன் தொடர்பு கொள்ளுங்கள். அதுவும் நேரடியாக இறைவனுடன் தொடர்பு கொள்ளுங்கள். பிறகு அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுங்கள். இவ்வாறே நீங்கள் செயல்பட வேண்டும் என்று போதித்தார்கள்.

**பிறகு ராகோஸா ரீஜியனில் உள்ள ஒரு கிராமத்தின் ஜமாஅத் தலைவர் சுஸா பாஜி சாஹிப் கூறுகின்றார்:**

முதலில் எனக்கு மிக விரைவில் கோபம் வந்து விடும். இவ்வாறு கோபம் வரும் போது நான் மனைவியையும் பிள்ளைகளையும் அடிக்க ஆரம்பித்து விடுவேன். ஏசிப் பேசுவது எனது அன்றாட வழக்கமாக இருந்து வந்தது. எப்போது நான் பைஅத் செய்தேனோ அப்போதிருந்தே எனக்கு தொழுகைகளின் பக்கம் கவனம் ஏற்பட்டு விட்டது. முன்பை விட அதிகமாக என்னிடம் பொறுமையும் சகிப்புத்தன்மையும் உருவாகி இருப்பதை நான் உணர்கின்றேன்.

இதுதான் ஆப்பிரிக்காவின் மிகத் தொலைவிலுள்ள ஒரு புதிய அஹ்மதியிடம் உருவாகியுள்ள தூய்மையான மாற்றமாகும்.

இதன் காரணம் அவருக்கு அல்லாஹ்வுடன் தொடர்பு உருவாகி இருக்கின்றது. தொழுகைகளின் பக்கம் கவனம் ஏற்பட்டது. அதன் காரணமாக அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவது, அதை செயல்படுத்துவது ஆகியவற்றின் பக்கம் கவனம் ஏற்பட்டது.

நான் ஜெர்மனியில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட சமயத்தில் ஒரு ஜெர்மனி இளைஞர் அஹ்மதியானார். அவரும் இதே விஷயத்தைத்தான் கூறினார். இதற்கு முன்னரும் நான் இதுபற்றி கூறியுள்ளேன். அவர் கூறுகின்றார். நான் கடுமையான கோபம் கொள்பவனாக இருந்தேன். சின்னச் சின்ன விஷயங்களில் எனக்கு கோபம் வந்து விடும். ஆனால் அஹ்மதியான பிறகு என்னிடம் எத்தகைய மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கு அஹ்மதிய்யத் தான் பொறுமை, சகிப்புத்தன்மை ஆகியவற்றை கற்றுத் தந்துள்ளது போல் எனக்கு தோன்றுகிறது என்று அவர் கூறுகிறார். இவ்வாறு ஏற்படுவதற்கு காரணம் அவருக்கு அல்லாஹ்வுடன் ஒரு தொடர்பு ஏற்பட்டது. அல்லாஹ்வுடன் தொடர்பு ஏற்பட்டதன் விளைவாக தன்னைக் கட்டுப்படுத்தும் இயல்பு உருவானது. மேலும் அல்லாஹ்வின் அடியார்களுக்குரிய உரிமையை செலுத்துவதன் பக்கமும் கவனம் ஏற்பட்டது.

பிறகு நம்முடைய இன்னொரு புதிதாக பைஅத் செய்த அஹ்மதி இவ்வாறு என்னிடம் கூறினார். நாங்கள் இதற்கு முன்னர் மது அருந்தி வந்தோம். சிகரெட் குடித்து வந்தோம். அஹ்மதிய்யதை ஏற்றுக் கொண்ட பிறகு நாங்கள் இந்த இரண்டு விஷயத்தையும் விட்டு விட்டோம். அவர் எழுதுகின்றார்: தொழுகைகளை முறையாகப் பேணும் போது இந்த வீணான விஷயங்களின் பக்கம் எங்களுக்கு கவனமே இருப்பதில்லை. தொழுகைகளின் பக்கம் கவனம் ஏற்பட்டது. அல்லாஹ்வுடன் தொடர்பு ஏற்பட்டது. அதன் விளைவாக இந்த எல்லா வீணான விஷயங்களிலிருந்தும் பாவங்களிலிருந்தும் தவ்பா செய்பவர்களாக அவர்கள்

ஆகிவிட்டார்கள். உண்மையான தொழுகைகள் இந்த தீமைகளிலிருந்து இவர்களை விடுவித்து விட்டது. அவ்வாறு விடுவிக்க வேண்டும். அஹ்மதிய்யா ஜமாஅத் பழைய கதைகளை மட்டும் கூறவில்லை. மாறாக, இன்னும் இந்தக் காலத்திலும் அடியானை இறைவனோடு தொடர்பு கொள்ள வைப்பது சம்பந்தமான எண்ணற்ற சம்பவங்கள் உள்ளன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் விளைவாக ஒரு புரட்சி இந்த மக்களிடம் உருவாகி இருக்கிறது. திருக்குர்ஆன் இவ்வாறு அறிவிப்பு செய்கின்றது.

*நிச்சயமாக தொழுகை தீமையான மற்றும் வெறுக்கத்தக்க செயல்களிலிருந்தும் ஒருவரை தடுக்கின்றது. (29:46)*

இந்த அறிவிப்பு இன்னும் அதன் முழுமையான பொலிவுடன் நிறைவேறி அதன் உண்மையை அறிவிக்கின்றது. எவர்கள் தூய்மையான உள்ளத்துடன் தொழுகைகளை நிறைவேற்றியவாறு அல்லாஹ்வின் முன்பாக குனிகின்றார்களோ அத்தகையவர்களின் தொழுகைகள் அவர்களை நிச்சயமாக தீமைகளிலிருந்தும் வெட்கங்கெட்ட செயல்களைச் செய்வதிலிருந்தும் வெறுக்கத்தக்க செயல்களிலிருந்தும் அவர்களை தடுப்பவையாக இருக்கின்றது. மாறாக திருக்குர்ஆனின் ஒவ்வொரு வாதமும் முன்னறிவிப்பும் எவ்வாறு இந்தக் காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனைகளுக்கு ஏற்ப சரியாக செயல்படுபவர்கள் மூலம் நிறைவேறி வருகிறதோ அவை மற்றவர்களுக்கு அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் கூட தென்படுவதில்லை.

புதிதாக பைஅத் செய்த ஒரு அஹ்மதியிடம் இருந்த தப்லீக் தொடர்பான ஆர்வம் தொடர்பாக **கானாவின் அமீர் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:**

நாங்கள் தப்லீகிற்காக அப்பர் ஈஸ்ட் பகுதிக்குச் சென்றோம். டம்பர்கூ என்ற இடத்தில் ஒரு ஆசிரியர் அஹ்மதிய்யத்தின் போதனைகளைக் கேட்டு சிறந்த தாக்கத்திற்கு உள்ளாகி பைஅத் செய்தார். அவர் மனத்தூய்மையில் எந்த அளவு முன்னேறியிருந்தார் என்றால் சிறிது காலம் கழிந்த பிறகு அங்குள்ள கோல்கா என்ற பெரிய நகரத்தில் இதுவும் வடக்கில்தான் இருக்கின்றது. கோல்காவில் குத்தாம்களின் தேசிய இஜ்திமா நடந்தது. பைஅத் செய்த அந்த ஆசிரியர் தன்னுடன் 20 ஆசிரியர்களை இந்த இஜ்திமாவிற்கு அழைத்து வந்தார். இவர்கள் அனைவரும் முதலிலேயே இவரது தப்லீக் மூலம் அஹ்மதிகளாகி இருந்தனர். தங்களை சீர்திருத்திக் கொள்வதுடன் இந்த மக்களுக்கு தப்லீகிலும் ஒரு ஆர்வம் இருக்கின்றது. அதன் காரணமாக ஜமாஅத் வளர்ச்சி அடைகின்றது.

பிறகு புர்கினோஃபாஸோ ரீஜியனில் உள்ள கோபிலா என்ற இடத்தில் சானா சுலைமான் என்ற அஹ்மதி இளைஞர் இருந்தார். அவருடைய மூன்று சகோதரர்களும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டனர். இவர்களது தந்தையார் அஹ்மதிய்யதின் கடும் எதிரியாக இருந்து வந்தார். பெரும்பாலும் ஜமாஅத்தை எதிர்ப்பதில் இவர் குருடராக செயல்பட்டார். தனது பிள்ளைகளை ஏசிப் பேசுவதுடன் அவர்களை வீட்டை விட்டு வெளியேற்றினார்.

புர்கினோஃபாஸோவில் நமது பல ரேடியோ நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மற்ற ரேடியோ நிலையங்களிலும் ஜமாஅத்தின் நிகழ்ச்சிகள் சில மணி நேரங்கள் ஒலிபரப்பப்படுகிறது. இந்த மூன்று மகன்களின் தந்தையார் ஒரு நாள் தனது ரேடியோவை ON செய்த போது அதில் இஸ்லாமிய போதனைகள் தொடர்பான ஒரு அழகிய தர்ஸ் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்த தர்ஸை கேட்ட பிறகு இந்த மகன்களின் தந்தையார் எந்த அளவு சிறந்த தாக்கத்திற்கு ஆளானார் என்றால் எல்லா மகன்களையும் அழைத்து அவர்களிடம் பாருங்கள். நீங்கள் காஃபிர்களுடன் சேர்ந்துள்ளீர்கள். (அதாவது அவர் அஹ்மதிகளை காஃபிர் என்று கூறுகின்றார்). அதிலிருந்து விலகி விடுங்கள். நீங்கள் இந்த நிகழ்ச்சியைக் கேளுங்கள். ரேடியோவில் எவ்வளவு அழகான நிகழ்ச்சி வந்துள்ளது. இதுதான் அல்லாஹ்வைச் சார்ந்துள்ள மக்களின் சொற்களாகும். இந்த சொற்கள் உள்ளத்தில் புகுந்து அதில் பதிந்து விடுகிறது. உள்ளத்தில் இறங்கிக் கொண்டே இருக்கிறது. இந்த தூதுச் செய்தியைக் கேளுங்கள். இவை தான் அல்லாஹ்வைச் சார்ந்தவர்களின் சொற்களாக

இருக்கின்றது. நீங்கள் ஏன் அஹ்மதிகள் கூறும் விஷயத்தைக் கேட்டு அதன் தாக்கத்திற்கு ஆளாகி அந்த ஜமாஅத்தில் சேர்ந்தீர்கள்? என்று அந்த தந்தையார் தங்களது மகன்களிடம் கேட்டார். பிறகு மகன்களைப் பார்த்து கேளுங்கள். இதுதான் இஸ்லாம் என்று கூறினார். தந்தையாருக்கு இந்த நேரத்தில் ஜமாஅத்தின் நிகழ்ச்சிகள் தான் ஒலிபரப்பப்படுகிறது என்பது முற்றிலும் தெரியாமல் இருந்தது. அந்த நிகழ்ச்சி அரசாங்க ரேடியோவில் ஒலிபரப்பானது. ஆனால் நிகழ்ச்சியின் இறுதியில் அறிமுக நஸ்ம் ஆன அஹ்மதிய்யத் சிந்தாபாத் அஹ்மதிய்யத் சிந்தாபாத் ஒலிபரப்பப்பட்டதும் அந்த தந்தையார் உடனடியாக ரேடியோவை அணைத்து விட்டார். இதைக் கண்ட மகன்கள் தந்தையார் அவர்களே! உண்மையில் நீங்கள் சரியானதைச் சொன்னீர்கள். உண்மையில் இவர்களே அல்லாஹ்வைச் சார்ந்துள்ள மக்களாவார்கள். இவர்களது சொற்கள் உள்ளத்தில் பதிந்து விடுகிறது. இதனால் இன்று முன்பை விட அதிகமாக நாங்கள் அஹ்மதிய்யத்துடன் ஒரு வலுவான உறவு மூலம் இணைந்துள்ளோம் என்று கூறினர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விளக்கங்கள், போதனைகள் ஆகியவற்றிற்கு ஏற்ப இஸ்லாமிய போதனைகளின்படி செயல்படுவதற்கு முயற்சி செய்வதுடன் திருக்குர்ஆனுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொடுத்துள்ள விளக்கங்களைக் கேட்பதைத் தவிர இவர்களுக்கு வேறு எந்த வழியும் இல்லை. ஏனென்றால் உலகிற்கு இதை விட சிறந்த அறிவை வேறு எவராலும் வழங்க முடியாது.

**கிர்கிஸ்தானிலிருந்தும் நமது முபல்லிக் அர்ஸத் மஹ்மூத் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:**

கிர்கிஸ்தான் ஜமாஅத்தின் தேசிய தலைவர் ஸலாமத் சாஹிப் அவர்கள் மூலமாக ஜில்தீஸ் அப்துலவியா சாஹிபா என்ற பெண் பைஅத் செய்தார். அந்தப் பெண் கிர்கிஸ்தானில் உள்ள அமெரிக்கன் இராணுவத்தில் பணிபுரிந்து வந்தார். அங்கு அவருடன் வேலை செய்து வந்த ஒரு அமெரிக்க கிறித்தவ இளைஞர் அப்பெண்ணின் நடத்தை, மிகுதியாக வெட்க உணர்வு ஆகியவற்றைப் பார்த்து அதன் காரணமாக இந்தப் பெண்ணை தாம் திருமணம் செய்வதற்காக தமது விருப்பத்தை கூறினார். அதற்கு அந்தப் பெண் நான் அஹ்மதி முஸ்லிம் ஆவேன். எனது ஜமாஅத்திடம் கேட்டுவிட்டு நான் உங்களுக்குப் பதில் கூறுவேன் என்று கூறினார். பிறகு அந்தப் பெண் Mission House -க்கு வந்தார். ஒரு முஸ்லிம் பெண் ஒரு முஸ்லிம் அல்லாதவரை திருமணம் செய்ய முடியாது என்று அந்தப் பெண்ணிடம் கூறப்பட்டது. இஸ்லாம் இதற்கு அனுமதி வழங்கவில்லை என்று கூறப்பட்டது. இதைக் கேட்ட பிறகு தன்மான உணர்வுள்ள நல்ல இயல்பைக் கொண்ட புதிதாக பைஅத் செய்த இந்த பெண் முஸ்லிமல்லாத அமெரிக்கரை திருமணம் செய்து கொள்ள மறுப்பு தெரிவித்து விட்டார். அந்த நபர் வைத்த கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார். இந்தக் கிறித்தவ இளைஞர் அந்தப் பெண் மீது மிகுதியான நேசம் வைத்திருந்தார். அந்த இளைஞர் நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் பிறகு நாம் திருமணம் செய்து கொள்ள முடியுமா ? என்று அந்தப் பெண்ணிடம் கேட்டார். அதற்கு அந்த பெண் நீங்கள் இஸ்லாத்தை ஏற்பதாக இருந்தால் அதுதான் உண்மையான மார்க்கம் என்பதை புரிந்து ஏற்க வேண்டும். திருமணத்திற்காக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். நான் இதில் சம்மதம் தெரிவிக்க முடியாது. இதற்காக நீங்கள் ஏற்றுக் கொள்வதாக இருந்தால் நான் உங்களை திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று கூறி விட்டார்.

ஒரு ஏழை நாடாக இருப்பதன் காரணத்தால் கிர்கிஸ்தானில் உள்ள பெண்கள் மற்ற நாடுகளிலுள்ளவர்களை திருமணம் செய்து கொள்வதற்கு முன்னுரிமை வழங்கக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் இந்த இளம் பெண் அஹ்மதி ஆகிவிட்டதன் காரணமாக இந்த கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார். கத்தோலிக்கப் பிரிவை சார்ந்த இந்த கிறித்தவ இளைஞர் அதற்குப் பிறகு தொடர்ந்து ஆறு மாதங்களாக ஜமாஅத் தொடர்பாக ஆராய்ந்து ஜமாஅத் நூல்களைப் படித்த பிறகு 2011 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 1 ஆம் தேதி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு அஹ்மதிய்யத் என்னும் உண்மை இஸ்லாத்தில் பைஅத் செய்து தன்னை இணைத்துக் கொண்டார். ஜமாஅத்தை ஆராய்ந்த சமயத்தில் இந்த இளைஞர் அஹ்மதிய்யத்திற்கு எதிராக செயல்படும் இணைய தளங்களையும் பார்த்தார்; அவற்றையும் படித்தார். இறுதியில் அஹ்மதிய்யத் என்னும் உண்மை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதில் தான் இவரது உள்ளத்திற்கு

நிம்மதி கிடைத்தது. அதன் காரணமாக அதை ஏற்றுக் கொள்ளும் பாக்கியத்தை அல்லாஹ் அவருக்கு வழங்கினான். இதுதான் அந்த தூய மாற்றமாகும். இதுதான் உறுதியாக நிலைநிற்கும் தன்மையும் ஆகும். இதற்காகத்தான் துஆ செய்யப்படுகிறது; துஆ செய்யப்படவும் வேண்டும்.

பெண் புதிதாக அஹ்மதிய்யத்தை தழுவினார். ஏழ்மையில் இருந்தார். பௌதீக ரீதியாகப் பார்க்கும் போது அவருக்கு சிறந்த வரண் வந்தது. ஆனால் மார்க்கத்திற்காக அவர் அதை ஏற்க மறுத்து விட்டார். இந்த சம்பவத்தில் சிலருக்கு கவலை அளிக்கக்கூடிய படிப்பினை இருக்கின்றது. ஜமாஅத்திலுள்ள இளம்பெண்களில் சிலர் மற்றவர்களைத் திருமணம் செய்ய விரும்புகின்றார்கள். அவர்களும் திருமணத்திற்காக பைஅத் செய்கின்றார்கள். இவ்வாறு புதிதாக அவர்கள் ஜமாஅத்தில் பைஅத் செய்து இணைகின்றார்கள். எனவே தான் இந்த வழிமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, புதிதாக பைஅத் செய்த ஒருவரின் மனத்தூய்மையை ஒரு வருடம் வரை சோதித்துப் பார்க்க வேண்டும். அதன் பிறகே நமது பெண்களை புதிதாக பைஅத் செய்தவர்களுக்கு திருமணம் செய்து கொடுப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும்.

இப்போது இணையதளம் மூலமாக பலவீனமான ஈமானை உடைய சிலரையும், குறைவான அறிவுடையவர்களையும் சந்தேகத்தில் ஆழ்த்தி விடுகின்றார்கள். இவ்வாறு சந்தேகம் கொள்பவர் ஒரு சிலராக இருந்தாலும் மக்களது உள்ளங்களில் சந்தேகங்கள் விதைக்கப்படுகின்றன. இதனால் அமைதியின்மை உருவாகின்றது. ஆனால், நான் குறிப்பிட்ட இந்த அமெரிக்க இளைஞர் கிறித்தவராவார். அவர் நமக்கு எதிராக செயல்படும் இணையதளங்களையும் பார்த்தார். ஜமாஅத்தின் இணையதளத்தையும் பார்த்தார். பிறகு இரண்டையும் ஒப்பீடு செய்து பார்த்தார்; துஆ செய்தார். அதன் பிறகு அவருக்கு உண்மை தெரிய வந்தது. அதனால் அவர் அஹ்மதிய்யத் மூலமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். நமது இளைஞர்களும் குறிப்பாக இளமைப் பருவத்தில் இருப்பவர்களை இப்படிப்பட்டவர்கள் வழிகெடுக்க முயற்சி செய்கின்றனர். சிலரை நட்பின் காரணமாக வழிகெடுத்து அவர்களை அவ்விஷயத்தில் தூண்டி விடுகின்றனர். இந்த இளைஞர்களும் அல்லாஹ்விடம் துஆ கேட்க வேண்டும். பிறகு பௌதீக ரீதியாகவும் எவ்விதத் தாழ்வு மனப்பான்மையிலும் நாம் இருக்க வேண்டிய தேவையில்லை. அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் போதனைகள் ஆதாரங்களால் நிரம்பிக் காணப்படும் போதனைகளாக இருக்கின்றது. ஏனென்றால், இது உண்மை இஸ்லாத்தின் போதனைகளாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எந்த இடத்தில் எல்லாம் தனது வாதத்தின் உண்மையை நிரூபித்துள்ளார்களோ, அங்கெல்லாம் எந்த அம்சத்தின் அடிப்படையில் அதனை நிரூபித்தாலும், அந்த அத்தனை இடங்களிலும் அதனை ஆதாரம் மூலமாகவே நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். எனவே தாழ்வு மனப்பான்மை கொள்வதற்கான கேள்விக்கே இடமில்லை. தேவை ஒன்று உள்ளது என்றால், நாம் மார்க்க அறிவை பெறுவதற்காக தேவைதான் இருக்கின்றது.

**இவ்வாறு பெனின் ஜமாஅத்தின் முபல்லிக் அன்ஸர் அப்பாஸ் பாத்தி ஸாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:**

அல்லேடா பகுதியிலுள்ள லோகோலி என்ற கிராமத்தில் புதிதாக பைஅத் செய்தவர்களின் மாநாடு நடந்தது. அதில் அந்தப் புதிதாக பைஅத் செய்தவர்கள் தமது சொற்பொழிகளில் மக்களுக்கு ஒரு முஸ்லிமுடைய பொறுப்புகள் பற்றி கூற ஆரம்பித்தனர்.

மாநாட்டின் நிறைவுரைக்குப் பிறகு ஒரு மவ்லவி அங்கு வந்தார். அந்த அஹ்மதியல்லாத மவ்லவி அங்குள்ள மக்களை வழிகெடுக்கவும், திசை திருப்பி தடுமாற்றத்திற்கு ஆளாக்கவும் முயற்சி செய்தார். அவர் அந்த மக்களைப் பார்த்து நீங்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டால் நீங்கள் அனைவரும் நெருப்பில் வீழ்ந்து விடுவீர்கள். எனவே, உடனடியாக இதிலிருந்து தவ்பா செய்வதாக அறிவிப்பு செய்யுங்கள். எல்லா முஸ்லிம் இமாம்களும் இவர்களை நரகவாசிகள் என்று கூறியுள்ளார்கள். முஸ்லிம் ஆலிம்களும், படித்தவர்களும், இமாம்களும், தலைவர்களும் இவர்களை நரகவாசிகள் என்று கூறிவிட்டார்கள். நீங்கள் அந்த நரகத்தில் விழப்போகின்றீர்கள் அல்லது விழுந்து விட்டீர்கள். இவர்களோடு சேர்ந்து நீங்களும் நரகவாசிகளாக ஆகி விடுவீர்கள் என்று அந்த ஆலிம் கூறினார். மேலும் அவர் கூறினார்: பாகிஸ்தானிலுள்ள முஸ்லிம்கள்

இவர்களை விரும்புவதில்லை. அங்கும் இவர்களை முஸ்லிம் அல்லாதவர்கள் என்றே மக்கள் கருதுகின்றார்கள்.

**இதைக் கேட்ட நமது முஅல்லிம் சாஹிப் எல்லா மக்களையும் பார்த்து இவ்வாறு கூறினார்:**

இந்த மவ்லவி சாஹிப் நமது விருந்தாளி ஆவார். நாம் இவருக்கு மதிப்பளித்தவாறு இவரிடம் இதை மட்டும் கேட்கின்றோம். இவர் கூறும் வி-யத்தை இறைவனின் தூய வசனங்களான திருக்குர்ஆனிலிருந்து நிரூபிக்க முடியுமா? இவர் கூறுவதை திருக்குர்ஆன் சாட்சி பகர்கின்றதா? குர்ஆனை அடிப்படையாக வைத்து தான் பேச வேண்டும். திருக்குர்ஆன் இவருக்கு ஆதாரமாக நின்றால் இவர் கூறுகின்ற அனைத்தையும் நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால், குர்ஆன் எங்களுக்கு ஆதரவாக இருந்தால் பிறகு நாங்கள் குர்ஆனை கைவிட முடியாது என்று கூறினார். இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும் போது மவ்லவி சாஹிப் உடனே குர்ஆனை நாம் ஏன் எடுக்க வேண்டும்? என்று கூறினார்.

பெனினிலுள்ள எல்லா இமாம்களும் உங்களை தவறான வழியில் உள்ளவர்கள் என்று கூறியுள்ளனர். பிறகு நாங்கள் குர்ஆனின் பக்கம் செல்ல வேண்டிய தேவை என்ன வந்து விட்டது. நீங்கள் தவறில்தான் இருக்கின்றீர்கள். இதற்கு எந்த ஆதாரமும் தேவை இல்லை. நீங்கள் நரகவாசிகள் தான் என தீர்ப்பாகி விட்டது என்று அந்த ஆலிம் கூறினார். இங்கு தீர்ப்பு கூறும் இறைவனாக அவர் ஆகி விட்டார். இதைக் கேட்ட புதிதாக பைஅத் செய்தவர்கள் உணர்ச்சி வசப்பட்டனர். பெரும்பாலும் புதிதாக பைஅத் செய்தவர்களே அங்கு இருந்தனர். அவர்கள் அந்த ஆலிமைப் பார்த்து உங்களுக்கு குர்ஆன் தேவையில்லை என்றால் எங்களுக்கும் நீங்கள் தேவையில்லை. நீங்கள் இங்கிருந்து வெளியேறுங்கள் என்று கூறியவாறு அந்த ஆலிமை பள்ளிவாசலிலிருந்து வெளியேற்ற முயற்சி செய்தனர். பிறகு நமது முஅல்லிம் சாஹிப் அவர்களுக்கு அதிகமாக அறிவுரை கூறி புரிய வைத்தார். சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்ளுங்கள். பொறுமையுடன் அவர் கூறுவதை சகித்துக் கொள்ளுங்கள். உங்கள் இடங்களில் வந்து அமருங்கள். நல்லொழுக்கத்தைப் பேண வேண்டும். இவ்வாறு அவரிடம் பரிமாறுவது நல்லதல்ல என்றும் கூறினார்கள்.

ஆனால், மக்கள் எந்த அளவு உணர்ச்சி வசப்பட்டனர் என்றால் அவர்கள் அந்த மவ்லவியை பள்ளிவாசலை விட்டும் வெளியேற்றி விட்டனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவஊத் (அலை) அவர்களின் காலத்திலிருந்தே முல்லாக்கள், பெயர் தாங்கி ஆலிம்களின் வழிமுறை இப்படித்தான் இருந்து வருகிறது. பழைய சம்பவங்களிலும் இதே போன்ற நிகழ்வுகளை நாம் பார்க்கின்றோம். அதாவது, அஹ்மதி திருக்குர்ஆன் வசனங்கள் மூலமாக ஒரு ஆதாரத்தை நிரூபிக்க முயற்சி செய்யும் போது, எப்போதும் இந்த மக்கள் ஹதீஸ், இன்னும் பிற விஷயங்களின் பக்கம் நம்மை கொண்டு செல்கின்றார்கள். அந்த ஹதீஸ்களுக்கு தங்களது விருப்பத்திற்கேற்ப விளக்கங்களும் கொடுக்கின்றனர். மற்ற ஆலிம்களின் கூற்றுகளை கூறுகின்றார்கள். ஒரு சஹாபியின் சம்பவம் இவ்வாறே வருகின்றது. அந்த சஹாபி பைஅத் செய்ததும் ஒரு பெரிய ஆலிமிடம் நான் அஹ்மதி மவ்லவி சாஹிபை திருக்குர்ஆனிலிருந்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை நிரூபித்துக் காட்ட வேண்டும் என்று கூறினேன். அவரும் அதனை ஏற்றுக் கொண்டார் என்று அந்த சஹாபி கூறினார். இதைக் கேட்ட ஆலிம் நான் அவர்களை திருக்குர்ஆனை விட்டும் வெளியே இழுத்துக் கொண்டு வருகின்றேன். அவர்களை நான் வேறு பக்கம் கொண்டு செல்லும் போது நீங்கள் அவர்களை மீண்டும் அதே இடத்திற்கு திரும்பவும் கொண்டு வருகின்றீர்கள். திருக்குர்ஆனிலிருந்தும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிரோடு இருப்பதை உங்களால் நிரூபிக்க முடியாது என்று கூறினார். எனவே, இதுதான் இவர்களது பழைய வழிமுறையாக இருந்து வந்துள்ளது.

**பெனின் ஜமாஅத்தின் முபல்லிக் அன்ஸர் அப்பாஸ் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

அஜாஜ் ஸினோபே என்ற இடத்தில் 2011 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 12 ஆம் தேதி மக்ரிப் தொழுகைக்குப் பிறகு தப்லீக் நிகழ்ச்சி ஆரம்பமானது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வருகை

பற்றியும் அவர்கள் மூலமாக இஸ்லாத்திற்கு ஏற்பட்ட முன்னேற்றம் பற்றியும் கூறப்பட்டதும் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் நாங்களும் இப்பணியில் உங்களுடன் இணைய விரும்புகின்றோம் என்று கூறினார்கள். எவர்கள் மூலமாக இஸ்லாத்திற்கு முன்னேற்றம் கிடைக்கின்றதோ அங்கேயே செல்ல விரும்புகின்றோம் என்றனர். அந்த சபையில் 167 நபர்கள் பைஅத் செய்யும் நல்வாய்ப்பை பெற்றார்கள். அங்கிருந்து திரும்பிச் செல்வதற்கு முன் நமது முஅல்லிம் சாஹிப் அவர்கள் நாளை மறுநாள் ஜுமுஆவின் நாளாகும். எனவே நாளை மறுநாள நாங்கள் இங்கு வந்து உங்களுடன் ஜுமுஆ தொழுவோம் என்று கூறினார். பைஅத் செய்த இந்த மக்கள் ஏற்கனவே முஸ்லிம்களாக இருந்தவர்கள் தான். இவர்களது நிலைமையை இந்த விஷயத்தின் மூலம் நீங்கள் கணித்துக் கொள்ளலாம்.

**முஅல்லிம் சாஹிப் கூறுகின்றார்:** நாளை மறுநாள் இங்கு வந்து நாங்கள் ஜுமுஆ தொழுவோம் என்று நான் கூறியதும் கிராமத்து மக்கள் மிகவும் வியப்புடன் ஜுமுஆ என்றால் என்ன? என்று கேட்டனர். நாங்கள் ஒருபோதும் ஜுமுஆவைப் பார்த்ததுமில்லை. ஒருபோதும் ஜுமுஆ தொழுததும் இல்லை. 15 வருடங்களாக நாங்கள் முஸ்லிம்களாக இருக்கின்றோம். இன்று வரை எந்த மவ்லவியும், மார்க்கத் தலைவரும் ஜுமுஆ தொழ வேண்டும் என்று எங்களிடம் கூறியதேயில்லை.

பிறகு ஜுமுஆ நாளில் அங்கு ஜுமுஆ தொழுகை நடத்தப்பட்டது. பிறகு இந்த மக்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி கற்றுக் கொடுக்கப்பட்டது. பிறகு அவர்களுக்கு அசல் இஸ்லாமிய போதனைகள் என்ன? ஜுமுஆ என்றால் என்ன? தொழுகை என்றால் என்ன? இரு பெருநாள்கள் என்றால் என்ன? என்பதெல்லாம் புரிய வைக்கப்பட்டது. மற்ற என்ன இறைவணக்கங்கள் உள்ளன? திருக்குர்ஆனின் போதனைகள் என்ன? என்பதெல்லாம் கூறப்பட்டது.

**அவர் எழுதுகின்றார்:** இந்தக் கிராமத்திற்குப் பக்கத்திலுள்ள இன்னொரு கிராமத்தில் மக்கள் அஹ்மதிகளானார்கள். அவர்களிடமும் அவர்கள் இங்கு வந்து ஜுமுஆ தொழும்படி கூறப்பட்டது. அடுத்த முறை நீங்கள் இங்கு வந்து ஜுமுஆ தொழுங்கள் என்று கூறப்பட்டது. அதற்கு அவர்கள பல வருடங்களாக இந்த கிராமத்துவாசிகளிடம் எங்களுக்கு கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. அதாவது எந்தக் கிராமத்தில் 167 பேர் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார்களோ அந்தக் கிராமத்துவாசிகளுடன் எங்களுக்கு கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. இதுவரை நாங்கள் அங்கு சென்றதுமில்லை. அவ்வாறே அவர்கள் இங்கு வருவதை நாங்கள் விரும்புவதுமில்லை என்று கூறினர். இரண்டு கிராமங்களுக்கிடையில் மிகப் பழைமையான கருத்து வேறுபாடு இருந்து வந்தது. பிறகு இரண்டு கிராமத்திலும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டவர்களை தனித்தனியாக வைத்து நாம் அஹ்மதிகளாகி விட்டோம். அஹ்மதிகளாக ஆகிவிட்டதால் நம்மிடைய நிலவும் கருத்து வேறுபாடுகள் முடிந்து விட்டன. இன்று நாம் மீண்டும் ஒன்றாக ஆகின்றோம்; நாம் ஒன்றாக வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எல்லாரையும் ஒன்றுசேர்க்கவே வந்துள்ளார்கள். நம்மை ஒன்றாக்குவதற்கே அவர்கள் வந்துள்ளார்கள். அதன் மூலம் முஸ்லிம்கள் ஒரே அணியாக ஒற்றுமையுடன் இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக செயலாற்ற முடியும். எனவே நாம் ஒன்றுசேர வேண்டும். ஒன்றுசேர்ந்து ஜுமுஆ தொழ வேண்டும் என்று கூறி அவர்களுக்கு விஷயங்கள் புரிய வைக்கப்பட்டது. இரு கிராம வாசிகளுக்கும் இதனால் பெரும் தாக்கம் ஏற்பட்டது. ஒரு நீண்ட காலம் பிரிந்திருந்த இவர்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். கோத்திரத்தார்களுக்கு இடையில் ஏற்பட்ட சண்டையாக அது இருக்கலாம். அவர்கள் ஜுமுஆ மூலம் மீண்டும் இணைந்து விட்டனர். இவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத் மூலமாக யவ்முல் ஜுமுஆ – ஒன்றுசேர்கின்ற நாள் என்பதன் கருத்தும் புதிய வடிவில் நிறைவேறியது 15 வருடங்களுக்குப் பிறகு இந்த மக்கள் ஜுமுஆ தொழுதார்கள். பிறகு இந்த ஜுமுஆவின் பரக்கத்தால் இரண்டு கிராமத்துவாசிகளிடமும் இருந்து வந்த பகைமையும் முடிந்து விட்டது. இந்த விஷயங்கள் உருவாகிவிட்டால் அதனால் பகைமை மட்டும் முடிவுக்கு வருவதில்லை. பிறகு அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப ருகமாவும் பைனஹும் – அவர்கள் தங்களுக்கிடையில் கருணையுடன் நடந்து கொள்வார்கள் என்ற கருத்து ஆரம்பமாகி விடுகிறது. பிறகு ஒருவரிடம், மற்றவருக்காக கருணையின்

உணர்வுகள் எழுகின்றன. ஒருவர் மற்றவருக்காக தியாகம் செய்யும் உணர்வு எழுகின்றது. இதுவே ஒரு நம்பிக்கையாளரின் மகிமையாகும். இப்படிப்பட்ட தூய்மையான மாற்றங்களை ஏற்படுத்தவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்துள்ளார்கள்.

**டெல்லி ஜமாஅத்தின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

முஹம்மது முர்ஸலீன் சாஹிப் 2008 ஆம் ஆணடு பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்தார். அவர் கூறுகின்றார். அவர் பைஅத் செய்து மூன்று நாள்கள் கழிந்த பிறகு அவர் கனவில் தான் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக செல்வதாகவும், அங்கு ஒரு பழைய கட்டடத்தில் உள்ள அறையில் செல்வதாகவும் பார்த்தார். அந்த அறையில் மேலும் இரண்டு நபர்கள் இருந்தனர். இருள் பரவி இருந்ததால் அவர்களை அவர் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. முஹம்மது முர்ஸலீன் சாஹிப் அங்கு சென்ற சமயத்தில் அங்கு பல மக்கள் இருக்கின்றார்கள். அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இருக்கின்றார்கள். இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் சென்று அவர்களை தொட்டுத் தொட்டுப் பார்க்கின்றார். பிறகு ஹுஸூர் (ஸல்) அவர்கள் தமது ஷஹாதத் கூறுவதற்காக நீட்டும் விரலை மேற்கூரையின் பக்கம் உயர்த்தினார்கள். அப்போது முழு வானமும் வெடித்தது போன்று இருந்தது. பிறகு அப்போது மலர்களின் தோட்டம் தென்படுகின்ற உள்ளத்தை ஈர்க்கக்கூடிய காட்சியை நான் கண்டேன். பிறகு ஹுஸூர் (ஸல்) அவர்கள் மீண்டும் தனது விரலை சுழற்றியதும் இந்தக் காட்சி முடிந்து விட்டது. இவர் கூறுகின்றார்: அப்போது நான் ஹுஸூர் (ஸல்) அவர்களிடம் நான் மும்பை செல்ல விரும்புகின்றேன் என்று கூறினேன். அதைக்கேட்ட ஹுஸூர் (ஸல்) அவர்கள் நீங்கள் பஞ்சாபிற்கு ஏன் போகக் கூடாது என்று கேட்டார்கள். இதற்குப் பிறகு எனது கண்கள் திறந்தன. நான் இந்த சம்பவத்தை ஏற்கனவே எனக்கு அறிமுகமாயிருந்த மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயித் சாஹிபிடம் கூறினேன். அதற்கு அவர் ஹுஸூர் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள். எனவே நாம் காதியான் செல்வோம் என்று கூறினார். பிறகு காயித் சாஹிப் உடன் முதல்முறையாக இவர் காதியான் சென்றார். தாருல் மஸீஹைப் பார்க்கச் சென்றேன். அவர் கூறுகின்றார்: நான் பைத்துல் ரியாஸத்திற்குச் சென்ற போது நான் அந்த அறையைப் பார்த்தேன். அது நான் கனவில் கண்ட அதே அறையாக இருந்தது. அதன் மூலம் எனது ஈமானுக்கு மிகுதியான வலிமை கிடைத்தது. உள்ளத்திற்கு பெரும் நிம்மதி கிடைத்தது.

இவ்வாறு அல்லாஹ்வின் அருளால் பைஅத்தும் செய்து இவர்கள் தங்கள் ஈமானிலும் முன்னேறி வருகின்றார்கள். புதிதாக ஜமாஅத்தில் இணைபவர்களின் ஈமானில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு அல்லாஹ் அவர்களுக்கு அவர்களது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் அடையாளங்களையும் காட்டுகின்றான். இது தொடர்பான சில சம்பவங்களை நான் கூறுகின்றேன். இவை மிகத் தொலைவில் வாழுகின்ற இந்த அஹ்மதிகளின் ஈமான் அதிகரிப்பதற்கும் காரணமாக இருக்கின்றது. மேலும் நிச்சயமாக நமது ஈமான் அதிகரிப்பதற்கும் இவை காரணமாக அமையும்.

**புர்கினோஃபாஸோவின் அமீர் சாஹிப் கூறுகின்றார்கள்:**

சிந்தீகா என்ற இடத்தில் வசிப்பவரும் தோரி பகுதியின் அன்ஸாருல்லாஹ் ஸயீம் ஆகவும் இருக்கின்ற அல்ஹஜ் புன்த்தி அவர்கள் சில மாதங்களுக்கு முன்னர் கடுமையாக நோய்வாய்ப்பட்டார். அவரை மருத்துவமனைக்கு கொண்டு வந்த போது உள்ளூர் மருத்துவர் இவரது வீட்டிலுள்ளவர்களை அழைத்து அவர்களிடம் இந்த நோயாளிக்கு சிகிச்சை அளிப்பது பயனற்றதாகும். இவர் இப்போது சில நொடிகளுக்கான விருந்தாளி ஆவார். எனவே இவரை வீட்டிற்குக் கொண்டு செல்லுங்கள் என்று கூறினார். அவரை தலைநகரமான வாகாடோபுவிற்கு கொண்டு வந்தார்கள். அங்கிருந்த அரசு மருத்துவமனைக்கு அவரை அனுப்பி வைத்தார்கள். அங்குள்ள மருத்துவர்களுக்கு நோயாளி சில நொடிகளுக்கான விருந்தாளியாக இருக்கின்றார் என்று கூறி அவருக்கு சிகிச்சை அளிக்க மறுத்து விட்டனர். இதனால் வீட்டிலுள்ள அனைவரும் நம்பிக்கை இழந்து விட்டனர்.

**அமீர் சாஹிப் கூறுகின்றார்:** நான் அவர்களிடம் மருத்துவர்கள் வெளிப்படையான நிலைமைகளைப் பார்த்து சிகிச்சை அளிப்பது சாத்தியமல்ல என்று கூறுகின்றார்கள். ஆனால் வாழ்க்கை அல்லாஹ்வின் கைகளில் இருக்கின்றது. நீங்களும் காலத்தின் கலீஃபாவுக்கு கடிதம் எழுதுங்கள் என்று கூறினேன். பிறகு அதே நாளில் அவர்கள் காலத்தின் கலீஃபாவுக்கு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தை அவர்கள் எனக்கு அனுப்பி விட்டு அவர்கள் எல்லாரும் துஆ செய்ய ஆரம்பித்தார்கள். அந்தக் கடிதத்தை எழுதி எனக்கு அனுப்பி விட்டு அவர்களும் அதிகமாக துஆ செய்ததன் விளைவாக அல்லாஹ் எவ்வாறு அவர்கள் மீது அருள் செய்தான் என்றால் அவருக்கு ஆரோக்கியம் திரும்ப ஆரம்பித்தது. பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில் அல்லாஹ்வின் அருளால் அல்ஹஜ் புன்த்தி சாஹிப் குணமடைந்தார். இன்று அல்லாஹ்வின் அருளால் எல்லா பணிகளையும் அவரால் செய்ய முடிகின்றது. எல்லா கூட்டங்களிலும் கலந்து கொண்டு அன்ஸாருல்லாஹ் பணிகளை மிகுந்த உழைப்புடன் அவர் செய்து வருகின்றார்.

இதற்கு எதிரில் சாலி என்ற இன்னொரு கிராமத்தில் ஒருவர் வசித்து வந்தார். அவரது பெயரும் அல்ஹஜ் புன்த்தி சாஹிப் ஆகும். இவர் ஜமாஅத்தின் கடுமையான எதிரியாக இருந்தார். ஒவ்வொரு சமயத்திலும் மக்களை ஜமாஅத்திற்கு எதிராக தூண்டிக் கொண்டேயிருந்தார். ஆனால் ஆரோக்கியத்தில் அவர் மிகவும் நன்றாக இருந்தார். எந்த நோயும் அவருக்கு இருக்கவில்லை. ஒருநாள் கிராமத்தில் மக்கள் அஹ்மதிய்யா ரேடியோவில் ஒலிபரப்பப்பட்ட தப்லீக் விஷயங்களைக் கேட்டுக் கொண்டிருந்த சமயத்தில் இந்த நபர் அந்த இடத்தைக் கடந்து சென்றார். மிகுந்த கோபத்துடன் இவர் ஜமாஅத்தை ஏசத் தொடங்கினார். இவர்கள் காஃபிர்கள். இவர்களது தப்லீகை கேட்காதீர்கள் என்று கூறினார். இதைக் கேட்ட மக்கள் நீங்கள் இவர்களுடன் திருப்தியடையாமல் இருந்தால் இருங்கள். ஆனால் இவர்களை ஏசாதீர்கள். இவர்களை இழிவுபடுத்துவதை விட்டு விலகுங்கள் என்று கூறினார்கள். ஆனால் அதற்கு அவர் தான் தொடர்ந்து இவ்வாறே செய்து வரப்போவதாகவும் இவ்வாறு செய்வதை ஒருபோதும் விடப்போவதில்லை என்றும் கூறினார். அதே இரவில் முழுமையான ஆரோக்கியமான நிலையில் அந்த நபர் தூங்கினார். மறுநாள் அவர் தனது படுக்கையில் மரணித்த நிலையில் இருந்தார். இரவில் அவர் மீது எப்படிப்பட்ட நோயின் தாக்குதல் இருந்தது என்பது நமக்கு தெரியவில்லை. அதன் விளைவாக அல்லாஹ் அவரை மரணிக்கச் செய்தான்.

**கொர்தோனோ பகுதியிலுள்ள பெனின் ஜமாஅத்தின் முஅல்லிம் ரேமி ஸகரிய்யா சாஹிப் கூறுகின்றார்:**

பீசு சாஹிப் என்ற ஒரு அஹ்மதியின் மகன் காணாமல் போய் விட்டார். இந்த கவலையில் அவர் முழு பகுதியிலும் மகனைத் தேடி அலைந்தார். ரேடியோவில் பலமுறை அறிவிப்பு செய்தார். ஆனால் அவரது மகன் கிடைக்கவில்லை. கவலையில் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் அவரது போன் எனக்கு வந்தது. எனது மகன் கிடைப்பான் என்று எனக்கு தோன்றவில்லை என்று கூறினார். முஅல்லிம் ஸகரிய்யா சாஹிப் கூறுகின்றார். நான் அவரிடம் அவநம்பிக்கை அடைவது பாவமாகும். துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்று வாதம் செய்கின்ற ஒரு இமாமை ஏற்றுக் கொண்டவர்களாக நாம் இருக்கின்றோம். இந்த மருந்தை பரிசோதித்துப் பாருங்கள். அல்லாஹ் அருள் செய்வான். நீங்களும் துஆ செய்யுங்கள். நானும் துஆ செய்கின்றேன். நாம் சேர்ந்து துஆ செய்வோம் என்று கூறினேன். முஅல்லிம் சாஹிப் கூறியதை அந்த மகனின் தந்தை ஸஜ்தாவில் விழுந்து அல்லாஹ்வே! இந்தப் பகுதியில் வேறு எவரும் உனது இமாமை ஏற்றுக் கொள்ளவில்லை. நான் மட்டும் தனியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டேன். நிச்சயமாக உனது இமாம் உண்மையாளர் ஆவார். நான் உன்னிடம் இவரது உண்மையை பொருட்டாக வைத்து வேண்டுகிறேன். நீ எனது மகனை எனக்கு தந்து விடு என்று துஆ செய்தார். அவர் கூறுகின்றார். நான் வெகு நேரமாக துஆ செய்து அழுதுகொண்டிருந்தேன். எனது இறைவனிடம் மகன் திரும்ப கிடைப்பதற்கு துஆ செய்து கொண்டிருந்தேன். துஆ செய்து முடித்த பிறகு மகன் எந்த இடத்தில் தொலைந்து போனானோ அந்த வழியாக நான் எனது வீட்டிற்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்தேன். நான் வழியில் சென்று கொண்டிருக்கும் போதே திடீரென்று காட்டில் எனது மகன் எனக்கு தென்பட்டான். அவர் கூறுகின்றார்: இது இமாம் மஹ்தி (அலை) அவர்களின் உண்மைக்கு சான்றாக இறைவன் எனக்கு காட்டியுள்ள உயிருள்ள அற்புதமாகும்.

**நைஜரின் அமீர் சாஹிப் கூறுகின்றார்கள்:**

இங்கு முஹம்மது சாலிஹ் என்ற எனது நண்பர் ஒருவர் வங்கியில் வேலை பார்த்து வருகின்றார். இவர் அஹ்மதிய்யா பள்ளிவாசலில் தொழுவதற்காக வந்து கொண்டிருந்தார். முஸ்லிம் ஆக இருந்தார். ஆனால் பைஅத் செய்யாமல் இருந்தார். ஒருநாள் அவர் பைஅத் செய்து விட்டார். வங்கியின் மேலதிகாரிகளும் அவரது நண்பர்களும் அவருக்கு தொல்லைகள் கொடுக்க ஆரம்பித்தனர். மேலும் ஜமாஅத் அவருக்கு பணம் கொடுத்துள்ளது. அதன் காரணமாக அவர் அஹ்மதியானார் என்று கூற ஆரம்பித்தனர். அவர் கூறுகின்றார்: எனக்கு இவ்விஷயத்தில் மிகுந்த துக்கம் ஏற்பட்டது. நான் பணம் வாங்கிக் கொண்டு அஹ்மதி ஆகியுள்ளேன் என்று இவர்கள் என் மீது குற்றம் சுமத்தியுள்ளனர். இதனால் நான் மிகுந்த வேதனைக்கு ஆளானேன். அன்று இரவில் நான் ஜமாஅத்தின் உண்மையைப் பொருட்டாக வைத்து மிகவும் அதிகமாக துஆ செய்தேன். அல்லாஹ்வே! நீயே எனக்கு வழிகாட்டுவாயாக! வெளிப்படையாகப் பார்க்கும் போது இந்த ஜமாஅத் இஸ்லாத்திற்கு தொண்டு செய்வதில் எல்லாரையும் விட முன்னால் நிற்கின்றது. ஆனால் இந்த ஜமாஅத்தின் உட்புற விஷயங்களை எனக்கு புரிய வைப்பாயாக. நானோ வெளிப்படையான விஷயங்களை மட்டுமே பார்த்துள்ளேன் என்று நான் துஆ செய்தேன். **மேலும் அவர் கூறுகின்றார்:**

இரவில் நான் ஒரு கனவில் ஒரு பெரிய மக்கள் கூட்டத்தைப் பார்த்தேன். எனது பார்வை எட்டிய தூரம் வரை மக்கள் கூட்டம் இருந்தது. எல்லாரும் வெண்ணிற ஆடை அணிந்திருந்தனர். அப்போது மேடையில் அவர் என்னைப் பார்த்துள்ளார். அமீர் சாஹிப் பிறகு எழுதும் போது நான் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களைப் பார்த்தேன் என்று எழுதியுள்ளார். நான் மேடையில் நிற்கின்றேன். நீங்களும் அப்போது வெண்ணிற ஆடை அணிந்திருந்தீர்கள். உரத்த குரலில் நீங்கள் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுகின்றீர்கள். மக்களும் உங்களுடன் சேர்ந்து லாயிலாஹ இல்லல்லாஹ் என திரும்பத் திரும்ப கூறுகின்றார்கள். மிகவும் இன்பான நிலையாக அது இருந்தது. முஹம்மது சாலிஹ் சாஹிப் கூறுகின்றார்:

இந்த நிலையிலேயே எனது கண்கள் திறந்த போது எனது நாவில் லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற சொற்கள் இருந்தன. அதை நான் கூறிக்கொண்டே இருந்தேன்.

இதன் மூலம் எனது உள்ளத்தில் இருந்த விஷயம் பசுமரத்தாணி போல பதிந்து விட்டது. அதாவது இந்த காலத்தில் லாயிலாஹ இல்லல்லாஹ்வை பாதுகாக்கும் பொறுப்பை அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு வழங்கியுள்ளான். இந்த கனவின் மூலமாக நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்தது சரிதான் என்பதை ஆறுதல் அளிக்கும் வகையில் அல்லாஹ் தெரிவித்துள்ளான். எனவே இனி எனக்கு எவரைப் பற்றியும் கவலை இல்லை. அல்லாஹ்வின் அருளால் இவ்வாறு மக்கள் தங்களது ஈமானில் வலுவடைந்து விடுகின்றார்கள். அல்லாஹ்வும் அவர்களுக்கு பல காட்சிகளைக் காட்டுகின்றான். அதன் காரணமாக அவர்களது ஈமான் மேலும் வலுவடைந்து விடுகிறது என்பதற்கான ஒரு சில சம்பவங்களை நான் கூறியுள்ளேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

சிந்தித்துப் பாருங்கள். கடந்த 1300 ஆண்டுகளில் நபித்துவ வழியிலுள்ள இத்தகைய காலத்தை வேறு யார் பெற்றுள்ளார்கள்? அவர்கள் இறைவனது அடையாளங்களாலும் புத்தம் புது இறை உதவிகளின் மூலமாகவும் ஒளியையும் நிச்சய உறுதியையும் பெற்றுக் கொண்டனர். சஹாபாக்கள் பெற்றதைப் போல இவர்கள் இதனைப் பெற்றுக் கொண்டனர். அவர்கள் இறைவழியில் மக்கள் பரிகாசம், எள்ளி நகையாடுதல், சாபங்கள், இழிவான சொற்கள், பல்வேறு வகையான உள்ளத்தைப் புண்படுத்தும் விஷயங்கள் போன்ற துக்கங்களை சகித்து வருகின்றனர். சஹாபாக்கள் துன்பங்களை சகித்துக் கொண்டது போல் இவர்கள் அத்துன்பங்களை சகித்துக் கொள்கின்றனர். அவர்கள் இறைவனின் தெளிவான அடையாளங்கள், வானத்தின் உதவிகள், நுட்பமான ஞானம் நிறைந்த போதனைகள் ஆகியவற்றின் மூலம் தூய வாழ்க்கையைப் பெற்றுக் கொண்டே செல்கின்றனர். தொழுகைகளில் அவர்கள் அழுகின்றார்கள். ஸஜ்தா செய்யும் இடங்களை

அவர்கள் தமது கண்ணீரால் நனைக்கின்றனர். இவர்களில் பலருக்கும் உண்மையான கனவுகள் வருகின்றன. சிலருக்கு இல்ஹாமும் வருகின்றது. இவர்களில் பலரையும் நீர் இவ்வாறு காண்பீர். அவர்கள் மரணத்தை நினைவு கூர்ந்தவாறு மென்மையான உள்ளத்துடன் உண்மையான தக்வாவில் முன்னேறிச் செல்பவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் இறைவனின் பிரிவினர் ஆவர். அவர்களை இறைவனே பாதுகாக்கின்றான். ஒவ்வொரு நாளும் அவர்களது உள்ளங்களை தூய்மைப்படுத்துகின்றான். அவர்களது நெஞ்சங்களை ஈமானின் நுட்பமான ஞானத்தால் நிரப்புகின்றான். வானத்தின் அடையாளங்கள் மூலமாக அவர்களை தன் பக்கம் ஈர்க்கின்றான். இவ்வாறே அவன் சஹாபாக்களை ஈர்த்தான். சுருக்கமாக, வ ஆகரீன மின்ஹும் என்ற சொற்களிலுள்ள கருத்திற்கேற்ப அதற்கான எல்லா அடையாளங்களும் இந்த ஜமாஅத்தில் தென்படுகிறது. மேலும் நிச்சயமாக இறைவனின் கூற்றுக்கள் ஒருநாள் நிறைவேறும்.

அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியின் ஈமானிலும் நிச்சய உறுதியிலும் வளர்ச்சியைத் தந்து அதில் அவரை முன்னேறும்படி செய்து அதை மேலும் வலுவடையும்படி செய்வானாக! நம்மைப் படைத்த இறைவனோடுள்ள நமது தூய்மையான தொடர்பு மேலும் மேலும் வளர்ச்சி அடையட்டும். மேலும் ஒருபோதும் நமது ஈமானில் தடுமாற்றம் ஏற்படாமல் இருக்கட்டுமாக!

இன்று ஜுமுஆவிற்குப் பிறகு நான் ஜனாஸா ஹாஸிர் தொழுகையைத் தொழ வைப்பேன். ஜனாஸா இன்று நல்லடக்கம் செய்யப்பட இருப்பதால் இன்றே ஜுமுஆவிற்குப் பிறகு ஜனாஸா தொழ வேண்டியது அவசியமானதாகும்.

இந்த ஜனாஸா மதிப்பிற்குரிய குர்ஷித் பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். இவர் மர்ஹூம் அப்துல் மன்னான் தீன் சாஹிப் அவர்களின் மனைவியாவார். இவர் ஆகஸ்டு 27 ஆம் தேதி காலையில் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபியான மதிப்பிற்குரிய பாபு காஸிம் தீன் சாஹிப் அவர்களின் சகோதரர் மருமகள் ஆவார். மேலும் இவர் பாபு அஸீஸுத்தீன் சாஹிபின் மருமகளும் ஆவார். அல்லாஹ் இவரை மன்னிப்பானாக! இவரது தகுதியை உயர்த்துவானாக! இவரோடு தொடர்புள்ளவர்களுக்கு பொறுமையைக் கடைபிடிக்கும் நல்வாய்ப்பை வழங்குவானாக! ஜுமுஆவிற்குப் பிறகு இவருக்காக ஜனாஸா தொழுகை நடத்தப்படும் இன்ஷா அல்லாஹ்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 02.09.2011**

Translated by : **Maulavi M. RAFEEQ AHMAD H.A.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**